தமிழ்நாடு அரசு

சுருக்கம்

பகுதி 2 திட்டம் – 2008–09 – சுற்றுச்சூழல் – தட்ப வெப்பநிலை மாற்றம் குறித்து ஆய்வு நடத்துதல் – ரூ.10.00 இலட்சம் ஒப்பளிப்பு ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுச்சூழல் மற்றும் வனத் (சு.2) துறை**

அரசாணை (2டி) எண். 31 நாள். 04.06.2008

படிக்க

இயக்குநர், சுற்றுச்சூழல் துறை, சென்னை–15 அவர்களின் கடித எண்.பி2/3544/07, நாள் 2.1.2008

=====

**ஆணை :**

தட்ப வெப்ப நிலை மாறுதல் உலகம் முழுவதும் ஒரு சுற்றுச்சூழல் பிரச்சினையாகவும், மிகப் பெரியதும், இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாட்டிற்கு அது ஒரு தீர்க்கப்பட வேண்டியதுமான ஒரு பிரச்சினையாகவும் உள்ளது. புவியின் தட்ப வெப்ப நிலை மண்டல ரீதியாகவும், உலக ரீதியாகவும் தொழில் வளர்ச்சி சகாப்தத்திற்கு முன்பிருந்தே குறிப்பிடத் தக்க வகையில் மாறுபட்டுள்ளதுடன், மனிதனின் சில செயல்பாடுகளும் இதற்குக் காரணமாக இருந்துள்ளது. மண்டலத்தில் ஏற்பட்டுள்ள தட்ப வெப்ப மாறுதல் ஏற்கனவே பௌதிக மற்றும் உயிரியல் வழிமுறைகளைப் பாதித்தது மட்டுமின்றி, சமூக மற்றும் பொருளாதார வழிமுறைகள் கூட பாதிக்கப்பட்டுள்ளதாக உணரப்படுகிறது. நீடித்து நிலைத்து நிற்கும் வளர்ச்சிக்கு இது ஒரு மிகப் பெரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளதுடன், உணவுப் பாதுகாப்பு, இயற்கை வளம், சுற்றுச்சூழல், பொருளாதார நடவடிக்கைகள், மனித ஆரோக்கியம் மற்றும் பௌதிக கட்டமைப்பு, வசதிகள் ஆகியவற்றில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவின் மக்கட்தொகையில் பெரும்பகுதி மக்கள் விவசாயம் மற்றும் வனப்பகுதிகளைத் தங்களின் வாழ்க்கைத் தேவைக்கு ஆதாரமாகக் கொண்டுள்ளதால், இப்பருவகால மாறுதல் காரணமான விளைவுகள் தமிழகத்தில் மக்களிடையே கவலையை ஏற்படுத்தி உள்ளது. கிடைக்கும் நீரின் மீது தாக்கம் ஏற்படும் போது, தட்பவெப்ப நிலை மாறுதலால் ஏற்படும் பாதிப்புகள், உணவுப் பாதுகாப்பு மற்றும் இயற்கைச் சூழலுக்கு அழிவுகள் ஏற்படுவதுடன் கடல்மட்ட உயர்வால் கடலோரச் சூழலுக்கும், உறைவிடங்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. எனவே, இது சம்பந்தமாக முழுமையாக ஆராய்ந்து தீர்க்கமான வழிமுறைகள் உருவாக்க வேண்டிய அவசியம் எழுகிறது. பருவநிலை மாறுதலால் தமிழ்நாட்டின் வளத்திற்கு அதிக பாதிப்புகள் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. எனவே, தமிழ்நாட்டில் பருவநிலை மாறுதலால் ஏற்படும் பிரச்சினைகளைத் தடுக்கவும், அப்பிரச்சினைகளை மக்கள் எதிர்கொள்வதற்கான வழிமுறைகள் குறித்து ஆய்வு செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. அண்ணா பல்கலைக் கழகத்தின் தட்ப வெப்ப மாற்றம் மற்றும் ஆராய்ச்சி மையம், தமிழ்நாட்டில் தட்ப வெப்ப மாறுதல் குறித்த ஆய்வு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் போன்ற ஆலோசனைகளை மேற்கொள்ள இசைவு தெரிவித்துள்ளதாக இயக்குநர், சுற்றுச்சூழல் துறை தெரிவித்துள்ளார். இந்த ஆய்வு மையத்தின் மூலம் தமிழகத்தில் பருவநிலை மாறுதல் மற்றும் அதனடிப்படையில் ஏற்படும் தாக்கம் குறித்த ஆய்வுப் பணியை மேற்கொள்ள,

ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) 2008–2009–ம் ஆண்டிற்கான பகுதி 2 திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யக் கோரி இயக்குநர், சுற்றுச்சூழல் துறை அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

3. இயக்குநர், சுற்றுச்சூழல் துறையின் கருத்துருவினை அரசு கூர்ந்து பரிசீலனை செய்தது. தமிழ்நாட்டில் பருவநிலை மாறுதல் குறித்த ஆய்வு மற்றும் நிவாரண நடவடிக்கை பற்றிய ஆய்வினை சென்னை அண்ணா பல்கலைகழகத்தில் உள்ள தட்ப வெப்ப நிலை மாற்றம் மற்றும் ஆராய்ச்சி மையம் மூலம் மேற்கொள்ளவும் இதன் தொடர்பாக ஆய்வு திட்ட அறிக்கை ஒன்றை அரசுக்கு அளிக்கவும் தொடரா செலவினமாக ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) 2008–2009–ம் ஆண்டிற்கான பகுதி–2 திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது. இத்திட்டத்தினை மேற்படி ஆராய்ச்சி மையம் செயல்படுத்துவதற்கான வரைமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பாக தனியே ஆணை வெளியிடப்படும்.

4. பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும் :-

> "3435. உயிரின வாழ்க்கைக் சூழலும் சுற்றுச்சூழலும் 03. சுற்றுச்சூழல் ஆராய்ச்சி, உயிரின வாழ்க்கைச் சூழலை மீண்டும் உருவாக்குதல் – 001 – நெறிப்படுத்துதலும் நிருவாகமும். பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்–II மாநிலத் திட்டம் – JA. சுற்றுச்சூழல் துறை 09. உதவி மானியங்கள்–03–குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள் (த.தொ.கு.3435–03–001–JA-0934)"

5. இவ்வாணைக்கு நிதித்துறையின் அ.சா.கு.எண்.28252/ கா.ப.ம.மீ/08, நாள் 09.05.2008–ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ந.சுந்தரதேவன்
அரசு செயலாளர்

<u>பெறுநர்</u>
இயக்குநர்,சுற்றுச்சூழல் துறை, சென்னை–15.
மாநில கணக்காயர், சென்னை–18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–9/35.
**நகல்**
நிதி (வரவு செலவு/கா.ப(ம) மீன் துறை,சென்னை–9.
சிறப்பு முயற்சிகள், திட்டம் மற்றும் வளர்ச்சி துறை,சென்னை–9.
சுற்றுச்சூழல் (ம) வனத் (வ.7) துறை,சென்னை–9.
உதிரி/இருப்புக்கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

(எம்.பரிமளாபாய்)
அரசு சார்புச் செயலாளர்